# <u>இலங்கை நிர்வாக சேவை தரம் III க்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை 2021 (2024)</u>

மேற்படி போட்டிப் பரீட்சையின் மீது 2025.01.03 ஆம் தினத்தன்றான அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட விண்ணப்பாரிகள், இலங்கை நிர்வாகச் சேவையின் தரம் IIIற்கு இணைத்துக் கொள்வதற்காக நடைபெறும் சாதாரண மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் மீது இலங்கை நிர்வாகச் சேவையின் பிரமாணக்குறிப்பின் "10.2.6" பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2025 பெப்ரவரி மாதம் 08, 09, 15 மற்றும் 16 ஆகிய தினங்களில் கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள பொது நிர்வாக , மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நடைபெறும். ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினம் மற்றும் நேரம் உட்பட அழைப்புக் கடிதங்கள் பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்படும்.

02. இலங்கை நிர்வாகச் சேவைக்கு நியமிக்கப்படுவது எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின் மொத்தத்தின் திறன் ஒழுங்குவரிசை மீது என்பதினால் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு பங்குபற்றுவதினால் மாத்திரம் இலங்கை நிர்வாகச் சேவையின் தரம் IIIஇன் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான எவ்வித உரித்தும் இல்லையென கவனத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. சாதாரண நேர்முகப் பரீட்சை

சாதாரண நேர்முகப் பரீட்சை குழுவிடம் கீழே குறிப்பிடும் ஆவணங்களின் முதல் பிரதிகள் மற்றும் மேலதிகப் புகைப்பட பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ் புகைப்பட பிரதிகள் உண்மைப்பிரதிகள் என உங்களால் பரிசோதனைக் குழுவின் முன்னிலையில் சான்றுரைப்படுத்தி பொறுப்பாக்க வேண்டும்.

(அ).அடிப்படை தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் (பிறப்புச் சான்றிதழ், பட்டச் சான்றிதழ் மற்றும் விபரணமான பெறுபேறுகள்)

(ஆ).தேசிய அடையாள அட்டை

(இ).பெயரில் மாற்றமிருப்பின் அது தொடர்பில் சத்தியக்கடதாசி

(ஈ). நீங்கள் வசிக்கும் பிரிவிலுள்ள கிராம சேவகரிடம் பெற்றுக் கொள்ளும் வசிப்பிட மற்றும் குணநலன் தொடர்பான சான்றிதழ் (டி.எஸ். 4 மாதிரி மூலமானதாக இருத்தல் வேண்டும்)

(உ). இவ் அழைப்புக் கடிதம்

04. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

(அ) இலக்கம் 1842/2 கொண்ட 2013.12.23 ஆம் தினத்தன்றான இலங்கை நிர்வாகச் சேவையின் பிரமாணக்குறிப்பின்படி, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் 25 ஆகும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின்படி பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டபடி உங்களின் திறனுக்கான புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| I. | முகாமைத்துவ திறன்கள் | - | 10 |
| II. | தலைமைத்துவ குணவியல்புகள் | - | 05 |
| III. | தொலைத்தொடர்பாடல் திறன்கள் | - | 05 |
| IV. | ஆளுமை | - | 05 |

(ஆ) சமூக/ கலாசார/ பொருளாதார மற்றும் அரசியல் சுற்றுச்சூழலில் காணும் கேட்கும் நிகழ்வொன்று/ விடயமொன்றிலிருந்து மேற்படி 4 (அ) I, II, III மற்றும் IV இல் குறிப்பிட்டுள்ள திறன் பரிசோதனை செய்யப்படுவதோடு, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவிடம் சமர்ப்பிக்க முன்னர் மூடப்பட்டுள்ள உறையினுள் உள்ள நிகழ்வுகளின் தொகுப்பிலிருந்து ஒன்றினை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு உங்களுக்கு கிடைப்பதுடன், அதற்கு தயார் செய்வதற்கு 15 நிமிடங்கள் வழங்கப்படும். அதன்படி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் மேற்படி பட்டியலிடப்பட்ட திறன்களை பரிசோதனை செய்வதற்காக உங்களிடம் கேள்விகள் கேட்கப்படும்.

(இ) அதற்கு மேலதிகமாக நேர்முகப் பரீட்சைக்கு பிரவேசிக்கும் முறை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு முழுவதும் காட்டும் சமர்ப்பிப்பு படியும் மேற்படி 4 (அ) வின் III மற்றும் IV ஆக பட்டியலிடப்பட்ட திறன்களை பரிசோதிப்பது நடைபெறும்.

05. குறித்த நாளில் சாதாரண மற்றும் கட்டமைக்க்ப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பங்குபற்றாதிருப்பின் அதற்காக வேறு தினமொன்று வழங்கப்படாததுடன், அத்தகைய விண்ணப்பங்கள் கருத்தில்

எடுக்கப்படமாட்டாது எனவும், உரிய சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சைக்கு பங்குபற்றும் சந்தர்ப்பத்தில் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத்துகின்றேன்.

06. நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடத்திற்கு பயணப்பொதிகள், கையடக்க தொலைபேசி மற்றும் வேறு தொலைதொடர்பு சாதனங்களை கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாதென அறியத் தருகின்றேன்.

07. மேலும், நேர்முகப் பரீட்சைக்கு பங்குபற்றுவதற்காக பயணச் செவுகளோ அல்லது எவ்வித கொடுப்பனவுகளோ செலுத்தப்படமாட்டாது.

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக ,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு